பெருத பதவியிலுள்ளவர்களுக்கும், "லே செகரட்டரி" பதவி உயர்வு வாய்ப் பளிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மேற்கண்ட விதிமுறை ஏற்படுத்தப்பட் டது. பதவி உயர்வு போன்ற வாய்ப்புகளுக்கு மருத்துவத்துறை தலைமை அலு வலகங்கள் மற்றும் வேறு அலுவலகங்களில் பணிபுரியும் நிலைப்பணியாளர்கள் (Ministerial Staff) எல்லோருக்கும் சம உரிமை அளிக்கப்படவேண்டும் என்று அண்மையில் உத்தரவிடப்பட்டிருக்கிறபடியால் மேற் கண்ட விதிமுறை அவசியமா என்பதை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

Harijan Welfare Boards

*7. *Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute separate Harijan Welfare Boards at Taluk, District and State levels to eradicate Untouchability; and

(*b*) if so, the details thereof?

அரிசன நல வாரியங்கள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தீண்டாமையை அறவே ஒழிக்கும் பொருட்டு, வட்ட, மாவட்ட, மாநில அளவில், தனித்தனி அரிசன நல வாரியங்கள் அமைத்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்த வட்ட, மாவட்ட, மாநில நிலைகளில் அரிசன நல வாரியங்களை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த மூன்று வகையான அரிசன நல வாரியங்களின் அமைப்பும் செயல் முறை களும் பின்வருமாறு :—

(1) வட்ட அரிசன நல வாரியம்:

இவ்வாரியத்தில் அரசினரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களும், தனியார் களும் பணிபுரிவார்கள். அரிசன நல தாசில்தாரும், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் உதவிக் காவல்துறை அலுவலரும் உறுப்பினர்கள் ஆவார்கள். ஒவ்வொரு பிர்க்காவிலிருந்தும் ஒரு தனியார் உறுப்பினராக நியமிக்கப்படுவார். இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட தீண்டாமை பற்றிய குற்றங்களைக் காவல்துறையினரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இவ்வாரியம் மாதம் ஒரு முறை கூடி காவல் துறையினரால் தீண்டாமை சம்பந்தப்பட்ட முறையீடுகளின் மீது எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்யும்.

(2) மாவட்ட அரிசன நல வாரியம்:

இவ்வாரியத்தில் மாவட்ட ஆட்சியாளரும், மாவட்டக் காவல் துறை அலுவ லரும், மாவட்ட நல அதிகாரியும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வட்ட வாரி யங்களின் தலைவர்களும் உறுப்பினர்களாகப் பணிபுரிவார்கள். இவ்வாரியம் மூன்று மாதங்களுக்கொரு முறை கூடி வட்ட வாரியங்களின் நடவடிக்கைகளை யும் தீண்டாமை ஒழிப்பு பணிகளை தீவிரப்படுத்த மேலும் எடுக்க வேண்டிய நட வடிக்கைகளையும் (ஆக்க பணிகளையும்) குறித்து ஆய்வு செய்யும்.

(3) மாநில அரிசன நல வாரியம் :

இவ்வாரியத்தில் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களும் சமூக நலத் துறைச் செயலாளரும், உள்துறைச் செயலாளரும், மாநில காவல்துறை அதிகாரியும், அரிசன நலத்துறை இயக்குநரும் 7 முதல் 9 வரை அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார்களும் உறுப்பினர்களாகப் பணிபுரிவார்கள். அரிசன நலத்துறை அமைச்சர் இவ்வாரியத்திற்கு தலைவர். சமூக நலத்துறைச் செயலாளர் இவ்வாரியத்தின் செயலாளராகப் பணி புரிவார். இவ்வாரியம் மூன்று மாதங்களுக்கொரு முறை கூடி மாவட்ட வாரியங்கள் எடுத்த முடிவுகளையும் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் ஆய்வு செய்யும்.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவர் அவர்களே, இந்த வாரியங்கள் எவ்வளவு காலத்திற்குள்ளாக ஏற்படுத்தப்படும்? தனித்தனியே குறிப்பிட்ட தவறுகளைப் பற்றிப் புகார் செய்தால், அவைகளை விசாரித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க அந்த வாரியங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வாரியங்களை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அரிசன நலத்துறை இயக்குநர் மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த வாரியங்கள் அமைக்கப்படும். பாதிக்கப்பட்டவர்கள் இந்த வாரிய உறுப்பினர்களிடம் அந்தப் புகாரை எடுத்துச் சொல்வார்களானால், அவை சரியானவைதானா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு காவல் துறையிடம் இந்த வழக்கைத் தருவார்கள். பிறகு அவர்கள் பரிசீலனை செய்து ருசுப்படுத்தி கோர்ட் நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்கள்.

திரு. டி. கே. சுப்பையா : அதில் தனியார் அங்கத்தினராக இருப்பதற்கு என்ன யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும்? குறைந்த பட்சம் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் அதில் அங்கத்தினராக இருக்க வேண்டுமென்ற வரம்பு ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கலப்புத் திருமணத்தை நாம் ஊக்குவித்தாலும், அந்த அளவிற்கு அதிகமாக இப்போது செய்துகொள்ளவில்லை. இனிமேல் செய்து கொண்டால் வாரியத்தில் சேர்த்துக் கொள்வதைப் பற்றி ஆலோசிப்போம். அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள், தீண்டாமை ஒழிப்பில் அக்கரை காட்டக்கூடியவர்கள் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப் படுவார்கள்.

திரு. கே. ராஜாராம் : தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக வருகின்ற புகாரின் பேரில் தண்டிப்பதற்காக மட்டும் இந்த வாரியங்கள் இருப்பதாக இல்லாமல், அவர்களுடைய சமுதாய பொருளாதார முன்னேற்றத்திற்கான யோசனைகளை அரசிற்குச் சிபாரிசு செய்வதற்கான அதிகாரம் அவற்றிற்கு வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட ஆலோசனைகளைக் கூறுவதற்கு இப்போதே மாவட்ட வாரியாகவும் மாநில அளவிலும் குழுக்கள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலாக தாழ்த்தப்பட்டவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்தந்த மாவட்டங்களிலுள்ள பொருளாதார நிலைமைகளைப் பற்றி ஆலோசனை சொல்லவும் அதற்கான நடவடிக்கை எடுக்கவும் இப்போதுள்ள குழுக்கள் பணியாற்றுகின்றன.

திரு. வி. வெங்கா : வட்ட, மாவட்ட அளவில் அமைய இருக்கிற இந்த அரிஜன நல வாரியங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளும் எண்ணம் அரசிற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட மாநில ஆலோசனைக் குழுக்களில் பெரும்பாலான சட்டமன்ற பாராளுமன்ற மேலவை உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். தாலுகா வாரியாக, பிர்கா வாரியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அதற்கு வாய்ப்பாக இருக்க முடியாது. மாநில அளவில் பங்குபெறும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டால் அதுபற்றி யோசிக்கப் படும்.

Harijan Colonies

*8. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Harijan Colonies built and promoted by the Government in the State during the years 1968-69, 1969-70 and 1970-71; and

(*b*) the expenditure incurred thereon?

அரிசன குடியிருப்புகள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் 1968-69, 1969-70, 1970-71-ஆம் ஆண்டுகளில் அரசினால் கட்டப்பட்ட, தொடங்கி வைக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புக்களின் எண்ணிக்கை என்ன?

(இ) இது குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :(அ) அரிசனங்களுக்காக கட்டப் பட்ட வீடுகளின் விவரம் வருமாறு :—

1968-69—151.

1969-70—137.

1970-71—600

(இ) செலவு விவரம் வருமாறு :—

1968-69—ரூ. 39,720

* 1969-70—ரூ. 68,770

1970-71—ரூ. 4,63,307

* முந்திய ஆண்டுகளின் வேலைகளுக்கான செலவும் இதில் அடங்கியுள்ளது.